ඌව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
ஊவா மாகாண கல்வித் திணைக்களம்
Uva Provincial Department of Education

# முன்னோடிப் பரீட்சை - 2021(2022)

| தரம் 11 | தமிழ் மொழியும் இலக்கியமும் – I, II | நேரம் : 3 மணி. |
|---|---|---|

மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடங்கள்

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
- 01 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (01), (02), (03), (04) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
- **தடித்த எழுத்தில் அமைந்த சொல்பற்றிய வினாவுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. ‘முழங்கு**திரைப்** புனலருவி கழங்கென முத்தாடும்...’ – இங்கு திரை என்பது,
   01. மறைப்பு 02. அலை 03. நீர் 04. ஆடை

2. ‘பெரிதினிது பேதையார் **கேண்மை...**’ – இங்கு கேண்மை என்பது,
   01. அன்பு 02. உண்மை 03. நட்பு 04. பாசம்

3. ‘**பிணக்க**ருக்கு மூத்தோரை யில்லா வவைக்களனும்...’ – இங்கு பிணக்கு என்பதன் எதிர்ப்பதம்,
   01. கணக்கு 02. வழக்கு 03. இணக்கு 04. சுணக்கு

4. ‘**ஈகை**யில்லாதவனுக்கு அவன் பெற்ற செல்வமுந் துன்பமாம்...’ – இங்கு ஈகை என்பதன் எதிர்க்கருத்து,
   01. கொடை 02. பரிசு 03. பெறுமதி 04. உலோபம்

5. ‘வசன கர்த்தாக்கள் நட்சத்திர அந்தஸ்த்தை அடைந்ததற்கு இப்படி ஒலிக்கு கொடுத்த **அதீத** முக்கியத்துவமே காரணம்.’ – இங்கு அதீதம் என்பதன் பொருள்,
   01. அளவுக்கதிகமானது 02. கடந்தது 03. மிகமோசமானது 04. சரியானது

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6. பின்வருவனவற்றுள் ஒத்தபொருள் தரும் இணைப்பு,
   01. தாய்–சேய் 02. மாதா–பிதா 03. கணவன்–கொழுநன் 04. அருமை–பெருமை

7. ‘இப்பொழுது பெருநாளின் புத்துணர்வு அவளுக்கு ஜ்வலித்தது’ – இங்கு ஜ்வலித்தது என்ற சொல் தரும் பொருள்,
   01. பரவுதல் 02. பெருமை 03. உதித்தல் 04. பிரகாசித்தல்

8. Climate என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் வடிவம்,
   01. காலநிலை 02. வானிலை 03. கண்காணித்தல் 04. அதிரி

9. மன்னர்களால் செய்யப்படும் சிறப்பு,
   01. நிந்தகம் 02. உரைகல் 03. மாராயம் 04. மெய்கீர்த்தி

10. பறவைகளின் கூட்டம் தொகுதி என்பதுபோல, ஆவின் கூட்டம்,
   01. மந்தை   02. நிரை   03. கூட்டம்   04. பந்தி

11. தெய்வம், இறைத்தல், வரி என்பனவற்றைக் குறிக்கும் ஒரு சொல்,
   01. கடவுள்   02. இரை   03. இறை   04. நிறை

12. பேணிப் பாதுகாத்துத்தருமாறு ஒருவரை இன்னொருவரிடம் ஒப்படைத்தல்,
   01. ஒப்படை   02. ஒப்புரவு   03. ஆச்சிரமம்   04. ஓம்படை

13. பின்வருவனவற்றுள் கிழக்குப் பிரதேச வழக்குச் சொல்,
   01. மோன   02. காடி   03. மனே   04. காத்து

14. ஒன்றை எதிர்பார்த்துக் காத்திருத்தல் என்பதைக் குறிப்பதற்குக் கையாளத்தக்க அருஞ்சொற்றொடர்,
   01. வைத்தகண் வாங்காது பார்த்துப் பார்த்து   02. வழிமேல் விழிவைத்து
   03. பட்டிதொட்டி எங்கும்   04. ஊனுறக்கமின்றி

15. 'சந்துபொந்து' எனும் இணைமொழியின் பொருள் தரும் வேறொரு இணைமொழி,
   01. காடுமேடு   02. தோட்டம்துரவு   03. மூலைமுடுக்கு   04. வீடுவாசல்

16. மனிதனுக்கு மனநிறைவைப்போன்ற சுகமளிக்கும் செல்வம் வேறொன்றில்லை என்பதை விளக்கும் பழமொழி,
   01. பேராசை பெருந்தரித்திரம்
   02. பொறுத்தார் பூமியாள்வார் பொங்கினார் காடாள்வார்
   03. குறைகுடம் தளம்பும். நிறைகுடம் தளம்பாது
   04. போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து

17. 'அச்சாணி இல்லாத்தேர் முச்சாணும் ஓடாது' எனும் பழமொழியின் கருத்து,
   01. சிறிதெனினும் சிறப்புண்டு   02. முக்கியத்தின் உயர்வு
   03. சிறியதன் பெருமை   04. தேரின் பெருமை

18. 'கண்ணோடுதல்' எனும் மரபுத்தொடரின் பொருள்,
   01. கண்ணாற் பார்த்தல்   02. கண்ணடித்தல்   03. இரங்குதல்   04. அங்குமிங்கும் பார்த்தல்

19. எடுத்துக்கொண்ட காரியம் எதிர்பாராது இனிது முடிந்து இரட்டிப்புப் பயன் தருவது என்ற பொருள் தருவதாக அமைந்த உவமைத் தொடர்,
   01. சருக்கரைப் பந்தலிலே தேன்மாரி பொழிந்தாற்போல
   02. பழம் நழுவி பாலில் விழுந்தாற்போல
   03. கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல
   04. தேடிய பூண்டு காலில் மிதிபட்டது போல

20. அறுபதாம் ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா,
   01. பவளவிழா   02. அமுதவிழா   03. வைரவிழா   04. பொன்விழா

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. அறிஞன் எனும் சொல்லின் இடைநிலை,
    01. வ் 02. இன் 03. ஞ் 04. ஜ்

22. 'ஐவரும் வந்தானா?' என்பது,
    01. மரபுவழு 02. இடவழு 03. விடைவழு 04. வினாவழு

23. 'ச'கரம் ஆங்கில எழுத்தில் 'S' ஒலி பெறாத சொல்,
    01. சைவம் 02. ஆசை 03. அச்சு 04. மனசு

24. 'நீ கவனமாகப் படித்தால் பரீட்சையில் சித்தி பெறுவாய்' – இவ்வாக்கியம்,
    01. கூட்டு வாக்கியம் 02. கலப்பு வாக்கியம் 03. தனி வாக்கியம் 04. தொடர் வாக்கியம்

25. பின்வருவனவற்றுள் தொழிற்பெயராக வருவது,
    01. முதலாளி 02. வந்தவன் 03. நடத்தல் 04. பார்த்தேன்

26. பின்வருவனவற்றுள் வேற்றுமைத் தொகையாக வந்த தொடர்,
    01. முக்குணம் 02. பனிக்குளிர் 03. இன்சொல் 04. மதிமுகம்

27. அவனுக்கு வேலை கிடைக்கவில்லை.
    அவன் முயற்சியைக் கைவிடவில்லை.
    இவ்விரு வாக்கியங்களையும் இணைக்கும் இணைப்பிடைச் சொல்,
    01. ஆனால் 02. ஆவது 03. ஆயினும் 04. அதனால்

28. பின்வருவனவற்றுள் முன்னொட்டாக அமைந்த சொல்,
    01. கனவான் 02. இடர்பாடு 03. பிரவாகம் 04. வெளிப்பாடு

29. 01. இலக்கணப்போலி - முன்றில், வாய்க்கால், வாயில்
    02. மரூஉ - சோணாடு, நல்லை, அருமந்த
    03. மங்கலம் - செத்தார், துஞ்சினார், நல்லபாம்பு
    04. குழூஉக்குறி - சொல்விளம்பி, கொக்கு, பரி

30. 01. போர்த்துக்கேய மொழி- சப்பாத்து, சாக்கு, வாக்கு
    02. ஒல்லாந்த மொழி - இலாச்சி, கந்தோர், தோம்பு
    03. ஆங்கில மொழி - பென்சில், மைல், விசுக்கோத்து
    04. மராட்டிய மொழி - அட்டவணை, குண்டான், சாம்பார்

- **புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. அடைமழை காரணமாக வெள்ளம் ........................................ பெருகியது.
    01. ஓய்வு ஒழிவற்று 02. கங்குகரையின்றி 03. வகைதொகையற்று 04. விதிவிலக்கின்றி

32. புராதனப் பொருட்களை சேகரித்து வைக்குமிடம் ........................................ எனப்படும்.
    01. பண்டகசாலை 02. நூதனசாலை 03. களஞ்சியசாலை 04. எய்ப்பில் வைப்பு

33. ஆய்வாளர் ஆய்வுக்குத் தேவையான ......................................... சேகரித்தனர்.
   01. கருதுகோள்களை  02. எடுகோள்களை  03. முடிவுகளை  04. தரவுகளை

34. இந்த வருடம் சனத்தொகை .............................. மேற்கொள்ளப்படும் என்று செய்திகளில் கூறப்பட்டது.
   01. கணிப்பீடு  02. அளவீடு  03. கணக்கீடு  04. தலையீடு

- **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதிகளைத் தெரிவு செய்க.**

35. ஒவ்வொரு பூவும் .........................................
   01. அழகானவை  02. அழகானவைகள்  03. அழகியன  04. அழகானது

36. பெற்றோர்களும், ஆசிரியர்களும் சேர்ந்து சிரமதானத்தில் .........................................
   01. ஈடுபட்டனர்  02. ஈடுபடுவார்  03. ஈடுபட்டான்  04. ஈடுபட்டார்

- **கீழே தரப்பட்டுள்ள பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

மானுடம் அடைந்து நிற்கும்
மாதவப் பேறின் உள்ளே
வான் உறு பேறும் ஒன்று
வையகத்து உண்டே ஆயின்
தான் எனும் நிலை கடந்த
தாய்மையே என்று சொல்வேன்;
பானுவாய் ஒளிரும் அந்தப்
பேற்றினுக்கு ஒப்பே இல்லை.

37. இப்பாடலின் பிரதான கருத்து யாது?
   01. மனிதன்  02. மாதவம்  03. தாய்மை  04. வையகம்

38. பானு எனக் குறிப்பிடப்படுவது,
   01. இயற்கை  02. சூரியன்  03. சந்திரன்  04. நட்சத்திரம்

39. கையாளப்பட்டுள்ள அணி,
   01. உவமை  02. உருவகம்  03. தற்குறிப்பேற்றம்  04. உயர்வுநவிற்சி

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்புமுறையைத் தெரிவு செய்க.
   (அ). எழுத்தில் இத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துவதற்குக் குறியீடுகள் துணை நிற்கின்றன.
   (ஆ). கண்களுக்கு ஆறுதல் தரவும், கருத்துக்களை நோக்கவும்
   (இ). எழுத்து மூலம் கருத்தைத் தெளிவாகத் தெரிவிப்பதற்குத் துணையாக, நிறுத்தற் குறிகள் பயன்படுகின்றன.
   (ஈ). சொற்களுக்கிடையே இடைவெளிகளும், நிறுத்தற் குறியீடுகளும் தவிர்க்கமுடியாது வேண்டப்படுகின்றன.
   (உ). பேசும்பொழுது ஒருவர் தமது குரலைத் தாழ்த்தியும், உயர்த்தியும், தாமதித்தும், நிறுத்தியும் கருத்துக்களைத் தெளிவாகப் புகட்ட முடியும்.
   01. அ,ஆ,இ,ஈ,உ  02. இ,உ,அ,ஆ,ஈ  03. இ,உ,ஆ,அ,ஈ  04. இ,உ,ஈ,ஆ,அ

ஊவா மாகாண கல்வித் திணைக்களம்
Uva Provincial Department of Education

# முன்னோடிப் பரீட்சை - 2021(2022)

| தரம் 11 | தமிழ் மொழியும் இலக்கியமும் – II | |
|---|---|---|

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.**
- **இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

**01. சுருக்கமான விடை தருக.**

i. பின்வரும் தொடரை சந்தி பிரித்து எழுதுக.
“சென் மலரை பண்பென்னும் நாரிற் றொடுத்தினிய
நன்மணமாம் பண்பு நனி கமழ்”

ii. பின்வரும் பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக.
“நீயொண்டு. என்ர கதையைக் கொஞ்சம் கேளன். என்ர கதையைக் கேளாம ஆக்கினைப் படுத்துறாய்.”

iii. ‘ஆடு’ என்ற சொல் பெயராகவும், வினையாகவும் வரத்தக்க வகையில் தனித்தனியாக வாக்கியம் எழுதுக.

iv. பின்வரும் வாக்கியத்தை பொருத்தமான நிறுத்தற் குறிகளையிட்டு மீண்டும் எழுதுக.
நான் அப்படி நடக்க மாட்டன் நீங்கள் சொல்லுங்கோ என்று தானே கேட்டனான் அம்மாவை மெல்லச் சமாதானம் பண்ணப் பார்க்கிறேன்.

v. ‘உமறுப் புலவர் இயற்கையழகில் மிகுந்த விருப்பம் உடையவர். ஆகவே, சீறாப்புராணத்தில் அணிகளைக் கையாண்டுள்ளார்.’ – இவ்வாக்கியத்திலுள்ள எழுவாய் பயனிலைகளை இனங்கண்டு எழுதுக.

vi. பின்வரும் தன்வினை வாக்கியத்தை பிறவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
கமலினி பரத நடனம் ஆடினாள்.

vii. (அ). நாட்டில் ஒமிக்ரோன் வைரஸ் தொற்று வேகமாக பரவுகின்றது.
(ஆ). மக்கள் அவதானமாக நடந்து கொள்ளவும்.
இவ்விரு வாக்கியங்களையும் பொருத்தமான இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி ஒரு வாக்கியமாக்குக.

viii. பின்வருவனவற்றில் செயப்படுபொருள் குன்றா வினைகளை இனங்கண்டு எழுதுக.
ஓடு, வெட்டு, நட, படி, அழு

ix. பின்வரும் வாக்கியத்தை பொருள் மயக்கம் நீக்கி மீண்டும் எழுதுக.
தரமான எமது நாட்டில் முகக்கவசங்கள் அதிகமாகத் தயாரிக்கப்படுகின்றன.

x. சம்பவம் ஒன்றை எழுத்து வடிவில் எழுதும்போது கடைப்பிடிக்க வேண்டிய அம்சங்கள் இரண்டினை எழுதுக. (2x10= 20 புள்ளிகள்)

**02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து, ஏறத்தாழ 250 சொற்களில் விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலைப்பினை இடுக.**

i. சகல துறைகளிலும் தொடர்பாடல் தொழில்நுட்பம் இன்று செல்வாக்குச் செலுத்துகின்றது. மக்களின் இடைத்தொடர்புக்குப் பயன்படுத்தப்படுகின்ற தொலைபேசி, தொலைக்காட்சி, வானொலி, இணையம், முகநூல் என்பன குறிப்பிடத்தக்கவையாக இருந்தாலும், இவற்றுள் அனைவரையும் தனது கட்டுக்குள் வைத்திருப்பது முகநூல் ஆகும். இதனைப் பயன்படுத்துகின்ற பயனாளர்கள் இது ஒரு சமூக வலைத்தளம் என்பதை மறந்து தமது இலக்கை அடைய நெறி பிறழ்வதைக் காணமுடிகின்றது. சமூகப்பண்பை இழந்துவரும் முகநூல் தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்பை ஏந்தி வருவதாக கூறப்படுகின்றது. இந்நிலை மாறி இதன் தனித்துவம் சமூக மேம்பாட்டுக்கு உதவும் வகை பற்றி **ஒரு விளக்கக் கட்டுரை.**

ii. சுகாதாரமும், பாதுகாப்பும் என்பது இன்றைய அன்றாட வாழ்க்கையில் அத்தியாவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. சுகாதாரத்தோடு பாதுகாப்பைப் பேணாவிட்டால், மனிதன் படிப்படியாக அழிவுக்குள்ளாகின்றான் என்பதை விளக்கும் வகையில் 'உலக கைகழுவுதல் தினத்தன்று' பொதுச் சுகாதார பரிசோதகரால் பாடசாலை மாணவர்களுக்கு நிகழ்த்தப்பட்ட **ஒரு மேடைப்பேச்சு.**

iii. நாட்டின் பொருளாதாரத்தில் முன்னிலையில் நிற்பது உணவு உற்பத்தியாகும். இன்று உணவு உற்பத்தி பசளை பாவனை காரணமாக பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. இயற்கைப் பசளையின் அருமை பற்றியும், இயற்கை அல்லாத பசளையின் தேவை பற்றியும் விவசாயிகள் இருவருக்கிடையே இடம்பெற்ற **உரையாடல் ஒன்று.**

iv. தினுஷனின் எதிர்கால இலட்சியம் பொறியியலாளன் ஆவதாகும். தனது இலக்கை விடாமுயற்சியின் காரணமாக அடைந்தவன், தொழில் நிமித்தம் வெளிநாடு செல்கிறான். அங்கே தனது படிப்புக்கேற்ற பதவி கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கின்றான். இதனை அடிப்படையாகக் கொண்டு **ஒரு சிறுகதை.**

(25 புள்ளிகள்)

**03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)**

எண்ணமும் பேச்சும் போதுமா? இவற்றைப் போக்க வழி என்ன? என்று எண்ணிப்பார்த்து, ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற சிறுபங்கைச் செய்யவேண்டும். அதனைப் போக்குவதற்கு வழி உள்ளது. அன்பை வளர்க்க வேண்டும். உரிமையைப் போலவே கடமையையும் போற்றவேண்டும், அல்லது இயலுமானால் உரிமையை விட கடமையை பெரிதாக போற்றி வாழவேண்டும்.

உரிமைக்கும் கடமைக்கும் இடையே ஏற்றத்தாழ்வை நீக்குவதற்காக இயற்கை அமைத்த ஒரு அருமையான பாதுகாப்பே அன்பு எனப்படுவது. அன்பு எங்கே உயர்ந்து விளங்குகின்றதோ, அங்கே உரிமைப் போராட்டம் இல்லை. கடமை குறைவு இல்லை. அதனால் "அன்பின் வழியது உயிர்நிலை" என்கிறார் திருவள்ளுவர். அன்பில்லாத வாழ்க்கை பாலை நிலத்தில் உள்ள பட்டமரம் போன்றது என்றும் கூறுகின்றார். அதனால் குடும்பத்தில் அன்பு ஆட்சி செய்யவேண்டும் என்று முன்னோர்கள் ஏற்படுத்தினார்கள். இல்வாழ்க்கை ஓர் அறம் என்று சிறப்பித்து 'இல்லறம்' என்றார்கள். மக்கட்பேறு, சுற்றம் தழுவுதல் முதலியவற்றை அதன் அங்கம் ஆக்கினார்கள்.

தேசபக்தி என்று அமைந்த அன்பு அப்படியே நாடு என்ற பெரிய குடும்பத்தை போற்றி வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும்.

சமயம் என்பது கடவுள் நெறி என்பதாகும். உலகத்தில் வாழும் எல்லோரிடமும் அன்பு செலுத்தி, உலகத்தையே கடவுளின் குடும்பம் என்று கருதும் பரந்த நோக்கத்தை வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும்.

ஆனால், குடும்பத்தில் தாய் செலுத்தும் அன்பை தவறாகப் பயன்படுத்திக்கொண்டு தந்தையோ, மக்களோ தன்னலமுடையவர்களாய், தீமை செய்வார்களேயானால் என்னவாகும்? அப்படித்தான், நாட்டில் ஒரு சாராரின் அன்பை தவறாகப் பயன்படுத்திக் கொண்டு மற்றொரு சாரார் தன்னலமாக வாழ்வார்களானால், அன்பு வரண்டு போகும். உரிமைக்கும், கடமைக்கும் போராட்டம் ஏற்படும் (10 புள்ளிகள்)

**04. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

நரை திரைக்கு ஆதாரம் கவலை. கவலைக்கு அடிவாரம் சமுதாயச் சூழ்நிலை. குறிப்பிட்ட சமுதாயச் சூழ்நிலை உருவாகி விட்டால் மனிதன் நரை திரை நீங்கி இளமையோடு வாழமுடியும். புராணம் 'சுவர்க்கத்தில்' நரை, திரை, பிணி, மூப்பு கிடையாது என்று கற்பனைக் கதை சொல்லுகின்றது. ''கவலை துறந்திங்கு வாழ்வதே வீடு'' என்று 'மோட்சத்துக்கு' விளக்கம் தருகின்றான் பாரதி.

நரை திரையிலாமைக்குக் காரணம் கேட்ட சான்றோர்களுக்கு நமது பெரியார் பதிலளித்தார். ''என் வாழ்வை கவலை துளி கூட தொட்டதில்லை.'', ''எதனால்?'', ''என் வாழ்வோடு, எனது மனைவி, மக்கள், இளையர், அரசன், என் போன்ற சான்றோர் வாழ்வும் குறிப்பிட்ட வண்ணம் இணைந்த ஒரு சமூகச் சூழ்நிலை எனது சமுதாயச் சூழ்நிலையாக ஒளி வீசிக்கிடக்கின்றது. அதனால்'', ''அதனால் கவலை ஒழிவது எப்படி?'', ''நான் அருள் பழுத்த இனிமையும் பெருமையும் வாய்ந்த புனித வாழ்வு வாழ்கிறேன். என் வாழ்க்கைத் துணைவி செறிவும், நிறைவும், செம்மையும், வெப்பமும், அறிவும், அருமையும் மிக்கவள். எனது மக்கள் பெற்றோருக்கு இன்பம் பயக்கவல்ல அறிவுமிக்கவர்கள். என்னினும் இளையவர்களும், ஏவலர்களும் என்போலும் கண்ணோட்டம் படைத்தவர்கள். என் குறிப்பு அறிந்து நடப்பவர்கள்.''

i. நரை, திரை, மூப்புக்குக் காரணம் யாது?
ii. வீடுபேறு என்பதைக் குறிக்கும் ஒத்தசொற்கள் இரண்டு எழுதுக.
iii. நரை, திரை இலாமைக்கு கூறப்படும் காரணம் யாது?
iv. இங்கு கூறப்படும் மனைவியின் பண்புகளைக் குறிப்பிடுக.
v. ''சமுதாயச் சூழ்நிலை'' விளக்குக. (02x05= 10 புள்ளிகள்)

**05.** மணிமலை நகரத்தின் எழில்புரம் பிரதேசத்தின் 'தென்றல்' இளைஞர் மன்ற செயலாளரான க.மதிவதனன் ஆகிய நீர் இப்பிரதேசத்தின் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கு உதவுமாறு விளையாட்டுத் துறை அமைச்சருக்கு **100 சொற்களில் ஒரு கடிதம்** எழுதுக.

**அல்லது**

மணிமலை நகரத்தின் சிறப்புக்களையும், குறைபாடுகளையும் விளக்கி 'தமிழ் ஒளி' பத்திரிகைக்கு **செய்தி ஒன்றினை 100 சொற்களில்** எழுதுக. (15 புள்ளிகள்)

ඌව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
ஊவா மாகாண கல்வித் திணைக்களம்
Uva Provincial Department of Education

# முன்னோடிப் பரீட்சை - 2021(2022)

| தரம் 11 | தமிழ் மொழியும் இலக்கியமும் – III | நேரம் : 2 மணி. |
|---|---|---|

- அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

01. சுருக்கமான விடை தருக.

i. “தெண்ணீர் கயத்து சிறுமீன் சினையினும்”

அ. ‘தெண்ணீர்’ பொருள் தருக.

ஆ. இங்கு ‘சினை’ எனக் குறிப்பிடப்படுவது யாது?

ii. “மால்விடையும் பொன்னாகமும் நாகமும் நாண நடந்தார்”

அ. மால்விடை என்றால் என்ன?

ஆ. இங்கு இவ்வாறு நடந்தவர் யார்?

iii. “பொய்மைசேர் மதியினிற் புலை நாத்திகம் கூறுவர்”

அ. ‘புலை நாத்திகம்” பொருள் தருக.

ஆ. இங்கு இவ்வாறு கூறுவோர் யார்?

iv. “செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்”

அ. ‘செழுங்குரங்கு’ பொருளை எழுதுக.

ஆ. ‘தேமா’ என்றால் என்ன?

v. “அவ் இரக்கம் இலாளையும் தன் நல் கையின் வணங்கினான்.”

அ. இரக்கம் இலாள் யார்?

ஆ. அவளை வணங்கியவன் யார்?

vi. “ஊர்ந்து இன் புறாஅர் ஆயினும் கையின்
ஈர்த்து இன் புறூஉம் இளையோர் போல்”

அ. இங்கு இளைஞர்களின் எச்செயற்பாடு குறிப்பிடப்பட்டுள்ளது?

ஆ. இங்கு வந்துள்ள அணியைக் குறிப்பிடுக.

vii. “பாமரத்தின் பாட்டிசைத்துப் பசுங்குயில்கள் கூவிப்
பசுங்கிளிகள் புளகமுறப் பருவ இரை தேடும்.”

அ. பாமரம் என்றால் என்ன?

ஆ. புளகமுறல் - பொருள் தருக.

viii. “ஏலம் பூ வாய் பொசுங்க எரியுறது தீக்கொழுந்து
காலப் புனல் கனக்கும் கண்ணீரையும் சுமந்து”

அ. இவ்வரிகள் உணர்த்தும் சம்பவம் யாது?

ஆ. ‘காலப்புனல்’ விளக்குக.

ix. “பகைத்த போரில் உய்வர் ஆர் என விரைவின்
உருத்து எழுந்து.”
அ. இங்கு ‘உய்வர்’ என்றால் என்ன?
ஆ. ‘உருத்து’ என்பதன் பொருள் யாது?

x. “சின்னப்பதுமை கொடு சிறார் செய்மணம் போல...”
அ. இவ்வரி உணர்த்தும் பெண்களின் நிலை யாது?
ஆ. பதுமை – பொருள் தருக. (10x02= 20 புள்ளிகள்)

**02. பின்வரும் செய்யுட் பகுதிகளையும், உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

i. உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறு சுவைபோல்
தப்பிய கந்தைபீ தாம்பரம் போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண்டது மாளிகை.
அ. இப்பாடல் உணர்த்தும் நீதிக்கருத்து யாது?
ஆ. இப்பாடலில் இடம்பெற்றுள்ள முதுமொழியை எழுதி, அதன் மூலம் உணர்த்தப்படும் செய்தியை எழுதுக.

ii. செங்கமல வாள்விழியாட் சேர்க்கக் கருதுமுவன்
மங்கை தனக்கேற்ற மணவாள னோபுகழ்வாய்
நங்கை நிலைக்கேற்ப நடக்க வலனோ புவியிற்
கொங்குமலர் மாலை குரங்கிற் களிப்பாரோ
அ. தலைவியின் சிறப்பு இப்பாடலில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
ஆ. இங்கு தலைவனால் தலைவியிடம் கூறுமாறு கூறப்பட்ட விடயங்களை எழுதுக.

iii. மட்டுருக் காலை அருவாளு மடித்து
மாவிலங்கன் பிடி சீவி யிறுக்கி
வெட்டும் பிடியைச் சிறக்கவே போட்டு
வெள்ளித்தகட்டினால் விரல் கட்டமிட்டு
வளர்ந்தரிவி வெட்டும் இளந்தாரி மாரை
நாவூறு வராமற் காரும் ஐயனாரே
அ. இப்பாடலில் அரிவாள் பற்றிய வர்ணனை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
ஆ. நாவூறு என்பதாற் கருதப்படுவது யாது?

iv. பறம்பை விட்டுச் சென்ற பின் ஏதோ ஒரு நாளில் பாரி மகளிர் தாம் பிறந்து விளையாடிய பறம்பு மலையை நினைத்தனர். நினைத்த நாளும் ஒரு நிலவு நாளாக இருக்கலாம். தந்தையுடன் பறம்பு மலையில் எத்தனை நிலவு நாட்களில் இருந்து களித்தனர். பாரி தான் வேட்டையாடிய கதையைச் சொல்லி இருக்கலாம். கபிலர் ஒரு குறிஞ்சிப்பாட்டை இசைத்திருக்கலாம் அந்த நிலா நாளில்.
அ. பாரி மகளிரின் நினைவலைகள் கூறப்பட்டுள்ள விதத்தை எழுதுக.
ஆ. நிலவு நாளின் செயற்பாடுகளாக இங்கு கூறப்பட்டுள்ளவை யாவை?

v. தொன்றுதொட்டு வந்த பாரம்பரியப்படி கதையை திரும்பவும் கையினால் எழுதுவதென்று தீர்மானித்தேன். ஆனால் ஆச்சரியம் என்னவென்றால் கதை வரமாட்டேன் என்றது. கம்பியூட்டரைப் படைப்பதற்கு முன்பாகவே கடவுள் கைகளைப் படைத்திருக்கிறார் என்பது என்

நம்பிக்கை. இருந்தும் எனக்கு கையினால் எழுத முடியவில்லை. கம்பியூட்டர் தான் தேவைப்பட்டது. அது இப்படிக் காலை வாரியும் எனக்கு புத்தி வரவில்லை.

அ. 'தொன்றுதொட்டு வந்த பாரம்பரியம்' என்று ஆசிரியர் கூறும் விடயம் யாது?

ஆ. ஆசிரியருக்கு கையினால் கதையை எழுத முடியாமற் போனதற்கான காரணம் என்ன?

(04x05= 20 புள்ளிகள்)

**03. கம்பராமாயண குகப்படலத்தில்**,

அ. கோசலையின் பிள்ளைப்பாசமும், கம்பர் அதனை வெளிப்படுத்தும் விதமும்.

ஆ. குகனின் வீரமும் சிறப்பும் கூறப்பட்டுள்ள விதம்.

என்பவற்றை விளக்குக.

**அல்லது**

**கிருட்டிணன் தூதுச் சருக்கத்தில்,**

அ. போரை வலியுறுத்தி கிருட்டிணன் கூறும் காரணங்கள்.

ஆ. அத்தினாபுரத்தின் சிறப்பு கூறப்பட்டுள்ள விதம்.

என்பவற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

**04. இலட்சியமும் சமநோக்கும்** என்ற கட்டுரையில்,

அ. இலக்கியங்கள் இலட்சியங்களை எடுத்துக் காட்டும் விதம்.

ஆ. அருச்சுனன், தருமன் ஆகியோரின் இலட்சியங்கள் சிறப்பிக்கப்பட்டுள்ள விதம்

என்பவற்றை விளக்குக.

**அல்லது**

**நாவலர் எழுந்தார்** கட்டுரையில்,

அ. நாவலரின் வாதத் திறமையும், நேர்மைக் குணமும் வெளிப்படுத்தப்பட்டுள்ள விதம்.

ஆ. நாவலரின் கம்பீரமும், தோற்றமும் எடுத்துக் காட்டப்பட்டுள்ள விதம்

என்பவற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

- **5, 6, 7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றை** தெரிவு செய்து விடை எழுதுக.

**05. முத்தம்மா** சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ. தாய் அன்பிற்காக ஏங்கும் காசிமின் மனநிலை.

ஆ. ஆசிரியரின் மொழிநடைச் சிறப்பு

என்பவற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

**06. பாரதியார் சுயசரிதையில்,**

அ. சிறுமி மீது பாரதியார் கொண்ட காதல் உணர்வை வெளிப்படுத்த கையாண்டுள்ள அணிச்சிறப்பும், பொருத்தப்பாடும்.

ஆ. மானிடர் கண்ணில்லாதவர் போல திகைப்பதற்கான காரணங்கள்

என்பவற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

**07. நாட்டார் பாடல்** மீனவர் பாடலில்,

அ. மீனவர்களின் வாழ்க்கை நிலை,

ஆ. மீனவர்களின் இறைபக்தி என்பன வெளிப்படுத்தப்பட்டுள்ள விதத்தை விளக்குக.

(10 புள்ளிகள்)



LOL.lk
Learn Ordinary Level
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
පසුගිය විභාග ප්‍රශ්න පත්‍ර
G.C.E. O/L
විද්‍යාව
A9+
ඉංග්‍රීසි භාෂාව
ENGLISH LANGUAGE
GUIDE PAST PAPERS
සිංහල
G.C.E. O/L SINHALA
General English
• Past Papers • Model Papers • Resource Books
for G.C.E O/L and A/L Exams
සමනල දැනුම
විභාග ඉලක්ක ජයගන්න
Knowledge Bank
Master Guide
WWW.LOL.LK
CASH ON DELIVERY
HOME DELIVERY
Whatsapp contact
+94 71 777 4440
Website
www.lol.lk
Order via WhatsApp
071 777 4440